Uploaded on 31.07.2026



| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறுதி அறிக்கை தாக்கல் | : | 22.10.2025 | தீர்வளிக்கப்பட்டது | : | 31.07.2026 |
| புலன்கொள்ளப்பட்டது | : | 22.10.2025 | விசாரணை காலம் | : | 9 மாதங்கள் 9 நாட்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.

**2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 31–ம் தேதி வெள்ளிக்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 849/2025**

## CNR No. TNSA1800-4313-2025

அரசுக்காக காவல் ஆய்வாளர், மேட்டூர் காவல் நிலையம்
**Cr. No. 98 of 2025 u/s 281, 106(1) of BNS** ...**புகார்தாரர்**

**–எதிர்–**

**செல்வம் (58/2025) த/பெ.காசியப்பன், நெ.34/119, அம்பேத்கார் நகர், சேலம் கேம்ப், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.** ..**எதிரி**

**வழக்கு விசாரணை விவரங்கள்**

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | இந்த வழக்கில் எதிரி கடந்த 26.02.2025ம் தேதியன்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அன்றே பிணையில் விடுவிக்கப்பட்டார். |
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 22.10.2025 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 12.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | -- | | |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 08.04.2026 | 08.04.2026 |
| | | | அ.சா.2 | 20.04.2026 | 20.04.2026 |
| | | | அ.சா.3 | 30.04.2026 | 30.04.2026 |
| | | | அ.சா.4 | 11.05.2026 | 11.05.2026 |
| | | | அ.சா.5 | 25.05.2026 | -- |
| | | | அ.சா.6 | 25.05.2026 | 25.05.2026 |
| | | | அ.சா.7 | 17.06.2026 | -- |
| | | | அ.சா.8 | 22.07.2026 | 22.07.2026 |
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 351(1)(ஆ)–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 28.07.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | பொருந்தாது | | |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை | | |

இந்நீதிமன்றத்தின் முன்னிலையிலுள்ள இந்த ஆண்டு பட்டிகை வழக்கானது, அரசுத் தரப்பிற்காக ஆஜரான **உதவி கற்றறிந்த அரசுதரப்பு வழக்கறிஞர் திருமதி.V.அனு ராதா** அவர்களது வாதங்களையும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர்

தரப்பிற்காக ஆஜரான **வழக்கறிஞர் திரு.R.பூபதி** அவர்களது வாதங்களையும் கேட்பதற்காக 30.07.2026ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, கோப்பில் உள்ள அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து, இன்று வரை பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளிக்கிறது:

**தீர்ப்பு**

இந்த வழக்கானது **மேட்டூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர்** அவர்களால், குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் அடிப்படையில் **சி.சி. எண். 849/2025** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டதாகும். கடந்த 24.02.2025–ம் தேதி, மாலை சுமார் 6 மணியளவில், மேட்டூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, மேட்டூர் பேருந்து நிலையத்திற்கு இந்த வழக்கில் உயிரிழந்த ராஜகோபால் என்பவர் தனது சொந்த வேலையாக வந்து, அந்தியூர் மற்றும் சத்தியமங்கலம் செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்திலிருந்து கொளத்தூர் பேருந்துகள் நிற்கும் இடத்தை நோக்கி தெற்கிலிருந்து வடக்காக நடந்து சென்று கொண்டிருந்தபோது, மேட்டூர் பேருந்து நிலையத்திற்குள் நுழைவாயில் வழியாக TN.33.N.3308 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை இந்த வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் செல்வம் என்பவர் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி, இடது பக்கம் திருப்பி நடந்து சென்று கொண்டிருந்த ராஜகோபால் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். அதன் காரணமாக கீழே விழுந்த ராஜகோபாலின் இரண்டு கால் பாதங்களின் மீதும் பேருந்தின் இடது முன்பக்க சக்கரம் ஏறி நசுங்கியதால் ஏற்பட்ட காயங்களின் விளைவால் அவர் இறந்து போனார். இந்த வகையில் **குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பாரத நீதி சட்டம் பிரிவுகள் 281 மற்றும் 106(1)**

ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல்களைச் செய்துள்ளார் என்று மேட்டூர் காவல் நிலைய ஆய்வாளர் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட வழக்கு இதுவாகும்.

**குற்றச்சாட்டுகளை புலன்கொள்ளல்**

1. கடந்த 2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22ஆம் நாளன்று இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த இந்நீதிமன்றம், **பாரத நீதிச்சட்டப்பிரிவுகள் 281 மற்றும் 106(1)** ஆகியவற்றின் கீழான குற்றங்களுக்காக போதிய அடிப்படை முகாந்திரங்கள் இருப்பதாக முடிவு செய்து இந்த வழக்கை கடந்த **22.10.2025–ஆம்** தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்க்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அவர் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதன் பேரில், **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 230–ன்** கீழ் வழங்கப்பட வேண்டிய வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் அவருக்கு முறையாக வழங்கப்பட்டன.

**குற்றச்சாட்டின் வனைதல்**

2. கடந்த **12.02.2026–ஆம்** நாளன்று, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, **பாரத நீதிச்சட்டப்பிரிவுகள் 281 மற்றும் 106(1)** ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, படித்துக்காட்டி அவரிடம் படித்துக் காட்டி, விளக்கி கூறி, அவரிடம் வினவப்பட்டது. அதற்கு குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தாம் குற்றமற்றவர் என்றும், வழக்கினை

எதிர்கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தார். அதன் தொடர்ச்சியாக, இவ்விசாரணை இந்நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள்**

3. அரசுத் தரப்பு தனது வழக்கினை நிரூபிப்பதற்காக, அரசுத் தரப்பு சாட்சிகள் **அ.சா. 1 முதல் அ.சா. 8** வரை முன்னிறுத்தி விசாரணை செய்து, சான்றாவணங்கள் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15** வரை குறியீடு செய்துள்ளது. குற்றஞ்சாட்டப்பட்ட நபர்த் தரப்பில் எந்தவொரு சாட்சியும் விசாரணை செய்யப்படவில்லை, மற்றும் எந்தவொரு சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசு தரப்பு வழக்கு விவரம்**

4. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விவரம்:**

a. கடந்த 24.02.2025–ஆம் தேதி மாலை 6 மணியளவில், அ.சா.1 சாந்தியின் கணவர் ராஜகோபால் டீ குடிப்பதாக சொல்லிவிட்டு சென்றுள்ளார். சிறிது நேரத்தில் அ.சா.3 அங்கமுத்து என்பவர் மூலம் மேற்படி ராஜகோபால் நடந்து செல்லும் போது பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது வலது கால் நசுங்கியும், இடது காலில் அடிபட்டும் அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று கோவை கங்கா மருத்துவமனைக்கு இரவு 11 மணியளவில் மேல் சிகிச்சைக்காக அ.சா.1 சாந்தி சேர்த்துள்ளார். அங்கு அறுவை சிகிச்சை செய்து வலது காலை நீக்கியுள்ளார்கள். ஆனாலும் அதிகாலை 5.25

மணியளவில் சிகிச்சை பலன் அளிக்காமல் ராஜகோபால் இறந்துள்ளார். மேட்டூர் அரசு மருத்துவமனையில் ராஜகோபால் சிகிச்சையில் இருந்த போது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அ.சா.1 சாந்தி கொடுத்துள்ளார். அந்தப் புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் நிலையம் திரும்பிய மேற்படி உதவி ஆய்வாளர், மேட்டூர் காவல் நிலைய குற்ற எண்.98/2025 என்ற எண்ணில் **பாரத நீதிச் சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 125(a)** ஆகியவற்றின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்துள்ளார்.

b. இதனையடுத்து, வழக்கின் புலன் விசாரணைப் பொறுப்பை ஏற்ற உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும் சம்பவ இடச் சாட்சிகளைத் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேல் சிகிச்சைக்காகச் கோயம்பத்தூர் கங்கா மருத்துவமனை சென்ற ராஜகோபால் உயிரிழந்துவிட்டதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், மேற்படி உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.9 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையைத் தயார் செய்துள்ளார். இந்த சம்பவத்தில் உயிரிழந்த ராஜகோபால் தொடர்பான வழக்கு, தொடர் புலன் விசாரணைக்காகக் காவல் ஆய்வாளர் அ.சா.8 அம்சவல்லி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

c. மேற்படி வழக்கின் புலன் விசாரணைப் பொறுப்பைப் 26.02.2025ம் தேதி பெற்ற காவல் ஆய்வாளர் அம்சவல்லி, அன்றையதினமே மாலை 5.00

மணியளவில் இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான செல்வம் என்பவரைக் கைது செய்து காவல் நிலையப் பிணையில் விடுவித்துள்ளார். இதனையடுத்து, இந்த சம்பவத்தில் விபத்தை ஏற்படுத்திய TN 33 N 3308 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை ஆய்வு செய்யுமாறு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் அளித்துள்ளார்.

d. அதனையடுத்து, இந்த சம்பவத்தில் உயிரிழந்த ராஜகோபால் என்பவரின் உடல் வைக்கப்பட்டிருந்த கோவை அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக, பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அ.சா.ஆ.10 பிரேத விசாரணை அறிக்கையைத் தயார் செய்துள்ளார். மேலும் இவ்வழக்கில் உயிரிழந்த ராஜகோபால் என்பவருக்குச் சிகிச்சை அளித்த மேட்டூர் அரசு மருத்துவமனை மருத்துவர் விவேகானந்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி ராஜகோபால் என்பவரின் உடலில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் பாலவெங்கடபெருமாள் மற்றும் கங்கா மருத்துவமனை மருத்துவர் யாமி என்பவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் மேற்படி கோவை அரசு மருத்துவரிடமிருந்து அ.சா.ஆ.13 பிரேத பரிசோதனை அறிக்கை ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

e. மோட்டார் வாகன ஆய்வு மேற்கொண்ட ஆய்வாளரையும் விசாரணை செய்து அ.சா.ஆ.12 மோட்டார் வாகன ஆய்வறிக்கையைப் பெற்றுள்ளார். மேலும் பிரேத பரிசோதனை அலுவல் புரிந்த தலைமை காவலர் மற்றும்

முதற்கட்டப் புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

f. இறுதியாக, தனது புலன் விசாரணையை முடித்து இவ்வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபரான செல்வம் என்பவர் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாகியதால், அவருக்கு எதிராக பாரத நீதிச் சட்டப் பிரிவுகள் 281 மற்றும் 106(1) ஆகியவற்றின் கீழ் கடந்த 23.09.2025–ஆம் தேதி இறுதி அறிக்கை தயார் செய்து, இந்த நீதிமன்றத்தில் 22.10.2025–ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

5. **அரசுத் தரப்பு சாட்சியங்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் விளக்கம்:** அரசுத் தரப்பு சாட்சி விசாரணை அனைத்தும் நிறைவுற்றதைத் தொடர்ந்து, கடந்த 28.07.2026 அன்று, அரசுத் தரப்பு சாட்சிகளால் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்க்கு எதிராகக் முன்னிலைப்படுத்தப்பட்ட குற்றஞ்சாட்டுச் சூழ்நிலைகள் குறித்து குற்றஞ்சாட்டப்பட்ட நபர்க்குத் தெளிவாக விளக்கி விவரித்து, படித்துக் காட்டி **பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 351(1)(b)–ன்** கீழ் அவரிடம் வினவப்பட்டது. அதற்கு குற்றஞ்சாட்டப்பட்ட நபர், தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் முற்றிலும் மறுத்ததுடன், இந்த வழக்கு பொய்வழக்கு என பதில் அளித்துள்ளார்.

6. **சாட்சிய பகுப்பாய்வு மற்றும் முடிவு:** இவ்வழக்கில் எதிரித்தரப்பில் எந்தவித வாய்மொழி அல்லது ஆவணச் சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும், அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அனைத்து சாட்சிகளையும் குற்றஞ்சாட்டப்பட்ட

நபரின் கற்றறிந்த வழக்கறிஞர் விரிவாகக் குறுக்கு விசாரணை செய்துள்ளார். குறுக்கு விசாரணையில் வெளிப்பட்ட அம்சங்கள், அரசுத்தரப்பின் வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இந்த நீதிமன்றம் முழுமையாகப் பரிசீலித்தபோது, இவ்வழக்கில் கீழ்க்கண்ட தீர்வு காணத்தக்க வினாக்கள் எழுகின்றன. அவற்றிற்கான விடைகள், சாட்சியங்களின் அடிப்படையில் பின்வருமாறு பரிசீலனை செய்யப்பட்டு விடையளிக்கப்படுகிறது.

7. **எழுவினா எண். 1: கடந்த 24.02.2025–ம் தேதி, மாலை சுமார் ஆறு மணியளவில், மேட்டூர் பேருந்து நிலையத்திற்குள் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் TN.33.N.3308 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் பொது இடத்தில் ஓட்டி, இந்த சம்பவத்தில் உயிரிழந்த ராஜகோபால் மீது மோதி விபத்து ஏற்படுத்தி, அதன் மூலம் அவர் இறந்து போக காரணமாக இருந்து பாரத நீதி சட்டம் பிரிவுகள் 281 மற்றும் 106(1)–ன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்துள்ளாரா?**

a. இந்த சம்பவம் தொடர்பாக புகார் அளித்த, இந்த விபத்தில் உயிரிழந்தவரின் மனைவியாகிய அ.சா.1 என்பவர், தனது கணவர் வீட்டில் இருந்து தேநீர் அருந்துவதாகக் கூறிவிட்டுச் சென்றவர் சிறிது நேரத்தில் விபத்துக்குள்ளானதாக அங்கமுத்து என்பவரிடமிருந்து தகவல் அறிந்து, மேட்டூர் அரசு மருத்துவமனைக்குச் சென்று கணவரைக் கண்டதாகவும், பின்னர் கங்கா மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது அவர் உயிரிழந்ததாகவும் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். இந்த

விபத்து யாருடைய கவனக்குறைவால் எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பாக மேற்படி அ.சா.1 நேரடி சாட்சி அல்லர்.

b. சம்பவத்தை நேரில் கண்டவர் என விசாரிக்கப்பட்ட அ.சா.2 என்பவர், சம்பவத்தன்று தான் மேட்டூர் பேருந்து நிலையத்தில் அரச மரத்தை ஒட்டியுள்ள தேநீர்க் கடையில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோது, தனது அண்டை வீட்டில் வசிக்கும் உயிரிழந்தவர் அந்தியூர் செல்லும் பேருந்திற்கு வலப்புறமாக, அதாவது ஓட்டுநர் இருக்கைக்கு எதிர்ப்புறமாக நின்றிருப்பதைக் கண்டதாகவும், சிறிது நேரம் கழித்து சத்தம் கேட்டு அருகில் சென்று பார்த்தபோது உயிரிழந்தவர் இரத்த வெள்ளத்தில் கால்கள் உடைந்து மயங்கிய நிலையில் அரசு பேருந்தின் சக்கரம் அருகில் இருந்ததைக் கண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனினும், குறுக்கு விசாரணையின்போது வலப்புற பின் சக்கரத்தின் அருகில்தான் உயிரிழந்தவர் அடிபட்டுக் கிடந்தார் எனத் தெரிவித்துள்ளார்; ஆனால் இவ்வழக்கில் உயிரிழந்தவர் பேருந்தின் இடது முன்பக்க சக்கரம் ஏறியே விபத்துக்குள்ளானதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

c. இதே சம்பவத்தை நேரில் கண்டவர் என விசாரிக்கப்பட்ட தனியார் பேருந்து நேரக் கண்காணிப்பாளர் அ.சா.3 என்பவரும், தான் பேருந்து நிலையம் வந்தபோது அந்தியூர் செல்லும் அரசு பேருந்திற்கு அருகில் தனது அண்டை வீட்டில் வசிக்கும் நபர் அடிபட்டு கீழே கிடப்பதைக் கண்டதாக மட்டுமே சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, விபத்து நிகழ்ந்த தருணத்தை நேரில் கண்டதாக இந்த நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. எனவே, மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய இருவருமே விபத்து நிகழ்ந்த விதத்தை முழுமையாக

நேரில் பார்க்கவில்லை என்பது தெளிவாகிறது.

d. இந்த விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்தின் நடத்துநராகிய அ.சா.4 என்பவர், பேருந்து நிலையத்திற்குள் பேருந்து நுழையும் வேளையில் தான் நேரக் காப்பாளர் அலுவலகத்தில் கையெழுத்திடச் சென்றுவிட்டதாகவும், இச்சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

e. பார்வை மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 மற்றும் அ.சா.7 ஆகியோரின் சாட்சியங்களும் இவ்வழக்கில் துணைபுரியவில்லை. அ.சா.5 என்பவர், சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தான் பேருந்து நிலையத்தில் இருந்தபோது கூட்டம் இருந்ததைக் கண்டதாகவும், ஆனால் அருகில் சென்று பார்க்கவில்லை எனவும், மறுநாள் மதியம் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கும்போது சாட்சியாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். அ.சா.7 என்பவர், சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பேருந்து நிலையத்தில் பொருள் வாங்க வந்தபோது காவல்துறையினர் தனது முகவரியை எழுதிக் கையெழுத்து வாங்கிக் கொண்டதாகவும், எதற்காக வாங்கினர் என்பது தனக்குத் தெரியாது எனவும் சாட்சியம் அளித்துள்ளார். இருவருமே சம்பவம் நிகழ்ந்த விதத்தை நேரில் கண்டவர்கள் அல்லர்.

f. மேற்படி சாட்சிகளைத் தவிர, இச்சம்பவம் தொடர்பாக வேறு எந்தத் தனிப்பட்ட சாட்சியும் அரசுத்தரப்பில் விசாரிக்கப்படவில்லை. விபத்து நிகழ்ந்த தருணத்தை மிக அருகிலிருந்து கண்டதாகக் கூறப்படும் அ.சா.2 கூட, விபத்து நிகழும்போது நடந்தது என்னவென்பதை உண்மையில் நேரில் பார்க்கவில்லை என்பதுடன்,

அரசு பேருந்தின் இடது முன்பக்க டயரில் உயிரிழந்தவர் அடிபட்டதாகப் பதிவாகியுள்ள சூழலில், வலப்புற பின் சக்கரம் என மாறுபட்ட சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இந்த விபத்து குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால்தான் ஏற்பட்டது என நிரூபிக்க அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் போதுமானதாக இல்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

g. மேலும், உயிரிழந்தவர் சுமார் 74 வயது நிரம்பிய மூத்த குடிமகன் என்பதையும், அவருக்கு நீரிழிவு நோய் காரணமாக காலில் உள்ள பெருவிரல் அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்பட்டதால் கால் சாய்த்தே அவர் நடப்பார் எனவும், அந்தப் புண் ஆறாமல் பெருவிரலில் கட்டுடன் இருந்தார் எனவும், அவருடைய அண்டை வீட்டாராகிய அ.சா.3 என்பவர் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். வயது முதிர்வு மற்றும் நோய்ப் பாதிப்பு ஆகியவை இயல்பாகவே கவனச்சிதறலை ஏற்படுத்தக்கூடும் என்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. மேலும், அரசுத்தரப்பு சாட்சியங்கள் குறித்து குற்றஞ்சாட்டப்பட்ட நபரிடம் கேட்டபோது, வேறொரு பேருந்தைப் பார்த்துக்கொண்டே வந்ததால் அந்தப் பேருந்து உயிரிழந்தவர் மீது மோதி தனது பேரூந்தில் விழுந்து விட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.ஆனால் அவ்வாறு நடைபெற்றதாகவும் இந்த வழக்கில் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை.

h. மேலும் இந்த வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஓட்டி வந்த அரசு பேருந்து ஓட்டிக்கொண்டு வந்து வேகமாக மோதியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், அந்த விபத்து நாளன்று ஏற்பட்ட காயங்களின் விளைவால்தான் இந்த

சம்பவத்தில் உயிரிழந்த ராஜகோபால் என்பவர் மரணமடைந்தார் என்றும் அரசுத்தரப்பு நிரூபித்திருந்த போதிலும், அந்த விபத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் கவனக்குறைவே காரணம் என்பதை நிரூபிப்பதற்குப் போதிய சாட்சியங்களோ ஆவணங்களோ அரசுத்தரப்பில் இல்லை என இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

i. மேற்படி அனைத்து சங்கதிகளையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது, இந்த விபத்து குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என நிரூபிக்க அரசுத்தரப்பில் போதுமான சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் இல்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

j. எனவே, மேற்படி காரணங்களின் அடிப்படையில் எழுவினா 1–க்கு அரசுத்தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடையளிக்கிறது.

**முடிவு**

முடிவாக இந்த வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் செல்வம், த/பெ.காசியப்பன் என்பவர் **பாரத நீதிச்சட்டப்பிரிவுகள் 281 மற்றும் 106(1)** ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 271(1)–ன்** கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்க்கு பிணையாளர்கள் வழங்கிய பிணைப் பத்திரத்தை ரத்து செய்து என்னை நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் ஜூலை மாதம் 31–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.31 19:29:45 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ. சா. 1 | சாந்தி | புகார்தாரர் |
| அ. சா. 2 | அஜீத்குமார் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ. சா. 3 | அங்கமுத்து | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ. சா. 4 | ஜெகதீஷ்வரன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ. சா. 5 | பாலன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ. சா. 6 | பிரசாந்த் | புலானய்வு அதிகாரி |
| அ. சா. 7 | சதீஷ் | பார்வை மகஜர் சாட்சி |
| அ. சா. 8 | அம்சவல்லி | புலானய்வு அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ. சா. ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து | அ.சா.5 |
| அ. சா. ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.4 | பார்வை மகஜர் | அ.சா.6 |
| அ. சா. ஆ.5 | மாதிரி வரைப்படம் | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| அ. சா. ஆ.6 | கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டது தொடர்பாக பெறப்பட்ட எழுத்து பூர்வமான தகவல் | அ.சா.6 |
| அ. சா. ஆ.7 | கங்கா மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட விபத்து பதிவேட்டு அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.8 | இறப்பு குறித்து பெறப்பட்ட எழுத்து பூர்வமான தகவல் ( 2 எண்ணிக்கை) | அ.சா.6 |
| அ. சா. ஆ.9 | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.10 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.6 |
| அ. சா. ஆ.11 | பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து | அ.சா.7 |
| அ. சா. ஆ.12 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை TN 33 N 3308 | அ.சா.8 |
| அ. சா. ஆ.13 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.8 |
| அ. சா. ஆ.14 | விபத்து பதிவேடு | அ.சா.8 |
| அ. சா. ஆ.15 | போலீஸ் இன்டிமேஷன் | அ.சா.8 |

**அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.31 19:29:31 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**

**குறிப்பு**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**நகல்:–**

1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.